# 10.ஆம்வகுப்பு–தமிழ்–ஒரு மதிப்பெண் வினாவங்கி(1–11)

## (திருத்தி அமைக்கப்பட்ட பாடப்பகுதிக்கானது)

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து,விடையைக் குறியீட்டுடன் எழுதுக:**

**இயல்–2**

1) உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம் -பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றவை
அ)உருவகம்,எதுகை ஆ)மோனை,எதுகை இ)முரண்,இயைபு ஈ)உவமை,எதுகை
2)பெரியமீசை சிரித்தார்-வண்ணச்சொல்லுக்கான தொகையின் வகை யாது?
அ)பண்புத்தொகைஆ)உவமைத்தொகை இ)அன்மொழித்தொகை ஈ)உம்மைத்தொகை
3) பிராண ரஸம் என்பதன் பொருள்......
அ)உயிர்வளி ஆ)பழச்சாறு இ)உயிர்வலி ஈ)துன்பம்
4) நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா,சிந்துக்குத் தந்தை,பாட்டுக்கொரு புலவன் என்றெல்லாம் புகழப்பட்டவர்
அ)பாரதிதாசன் ஆ)கவிமணி இ)பாரதியார் ஈ)வாணிதாசன்
5)எட்டயபுர ஏந்தலாக அறியப்பட்ட கவிஞர்.......
அ)பாரதிதாசன் ஆ)பாரதியார் இ)கவிமணி ஈ)சுரதா
6)கேலிச்சித்திரம்,கருத்துப்படம் போன்றவற்றை உருவாக்கியவர்.........
அ)பாரதிதாசன் ஆ)கவிமணி இ)சுரதா ஈ)பாரதியார்
7)பாரதியார் எழுதிய காவியத்தைத் தேர்ந்தெடுக்க
அ)பாப்பா பாட்டுஆ)கண்ணன் பாட்டுஇ)பாஞ்சாலி சபதம் ஈ)புதிய ஆத்திச்சூடி
8)உரைநடையும்,கவிதையும் இணைத்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படுவது
அ)வசன கவிதை ஆ)புதுக்கவிதை இ)மரபுக்கவிதை ஈ)ஹைக்கூ கவிதை
9)காற்று எதைச் சுமந்து வர வேண்டுமென பாரதி அழைக்கிறார்?
அ)கவிதையை ஆ)மகரந்தத்தூளை இ)விடுதலையை ஈ)மழையை
10)வசன கவிதையைத் தமிழில் அறிமுகப்படுத்தியவர்........
அ)பாரதிதாசன் ஆ)பாரதியார் இ)கவிமணி ஈ)வாணிதாசன்
11)பாரதியார் ஆசிரியராகப் பணியாற்றிய இதழ்கள்........
1)இந்தியா 2)சுதேசமித்திரன் 3)எழுத்து 4)கணையாழி
அ)1,2 சரி ஆ)முதல் மூன்றும் சரி இ)நான்கும் சரி ஈ)1,2 தவறு
12)வேற்றுமை,வினை,பண்பு முதலியவற்றின் உருபுகள் மறைந்து இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் ஒரு சொல் போல் நிற்பது--------தொடராகும்.
அ)தொகாநிலை ஆ)வேற்றுமை இ)தொகைநிலை ஈ)எழுவாய்

13)தொகைநிலைத்தொடர்----------வகைப்படும்.
அ)ஐந்து ஆ)ஏழு இ)ஒன்பது ஈ)ஆறு
14)பனிக்கடல் என்பதன் இலக்கணக் குறிப்பு
அ)உவமைத்தொகை ஆ)தொகையுவமை இ)உருவகம்
ஈ)வேற்றுமைத்தொகை
15)வேற்றுமை உருபும்,பயனும் உடந்தொக்க தொகையைக் கண்டுபிடி
அ)பள்ளி செல் ஆ)மக்கள் தொண்டு இ)செய்தொழில் ஈ)தைத்திங்கள்
16)காலம் கரந்த பெயரெச்சமே---------ஆகும்.
அ)பண்புத்தொகை ஆ)வினைத்தொகை இ)வினையெச்சம் ஈ)பெயரெச்சம்
17)எண்ணல்,எடுத்தல்,முகத்தல்,நீட்டல் என்னும் நான்கு அளவுப்பெயர்களைத் தொடர்ந்து வருவது------அ)உம்மைத்தொகை ஆ)எண்ணும்மை
இ)அளவைப்பெயர் ஈ)உவமைத்தொகை
18)மார்கழித்திங்கள்,சாரைப்பாம்பு ஆகியசொற்களில் இடம்பெற்ற பொதுப்பெயர்கள்
அ)மார்கழி,சாரை ஆ)திங்கள்,பாம்பு இ)மார்கழி,பாம்பு ஈ)திங்கள்,சாரை
19)செங்காந்தள் என்ற தொகைச்சொல்லில் மறைந்து வரும் உருபு
அ)ஆன ஆ)ஆகிய இ)போன்ற ஈ)ஐ
20)முறுக்குமீசை வந்தார் என்பது------------தொகை
அ)பண்புத்தொகை ஆ)வினைத்தொகை இ)அன்மொழித்தொகை
ஈ)இருபெயரொட்டுப்பண்புத்தொகை
21)இருபெயரொட்டுப் பண்புத்தொகையில்-------பெயர் முன்னும்,-------பெயர் பின்னும் வரும்.
அ)பொது,சிறப்பு ஆ)இடுகுறி,காரணம் இ)காரணம்,இடுகுறி ஈ)சிறப்பு,பொது
22)வேற்றுமைத்தொகை--------வகைப்படும்.
அ)6 ஆ)7 இ)8 ஈ)9

அ.உ.நி.பள்ளி,தளிக்குளம்,தஞ்சை.மா.
www.Padasalai.Net

விடைகளை அறிய பின்வரும் இணைப்பைச் சொடுக்கவும்

[இயல்-2 க்கான விடைகள்]